எண்: 85 / 2025 நாள்: 04.07.2025

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**செய்தி வெளியீடு**

**ஜூன் 2024 முதல் ஜூன் 2025 வரை 17,702 இளைஞர்கள் தேர்வு**

அரசுப்பணியை எதிர்நோக்கி இருக்கும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக **17,595** காலிப்பணியிடங்கள் ஜனவரி 2026-க்குள் நிரப்பப்படுமென தமிழ்நாடு அரசு ஜூன் 2024-ல் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அறிவித்திருந்தது.

தேர்வர்களின் நலன் கருதி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவுப் பணிகளை துரிதப்படுத்தி, ஜூன் 2024 முதல் ஜூன் 2025 வரை பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலுள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப **17,702** இளைஞர்களை தெரிவு செய்துள்ளது. அதாவது, தமிழ்நாடு அரசு ஜனவரி 2026 வரை நிர்ணயித்த இலக்கை, தேர்வாணையம் 7 மாதங்களுக்கு முன்பாகவே எட்டியுள்ளது. மேலும் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு கூடுதலாக 2500-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்ப தெரிவுப்பணிகள் நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ச. கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,

செயலாளர்